


புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2054 | பிப்ரவரி 02, 2023 | புரட்சி 22 | முழக்கம் 03 | விலை: ரூ.3.00

# பெரியார் சிலை அகற்றிய அதிகாரிகள் மீது நடவடிக்கை

காரைக்குடியில் கழகத் தோழர் இளங்கோவன் புதிதாகக் கட்டிய தனது இல்ல வளாகத்துக்குள் பெரியார் மார்பளவு சிலை ஒன்றை நிறுவி, அதன் திறப்பு விழாவுக்காக கழகத் தலைவர் கொளத்தூர் மணியை அழைத்திருந்தார்.

ஜன. 29 அன்று இல்லத் திறப்புக்கு முன்பே சிலையை அதிகாரிகள் அகற்றி விட்டனர்.

காவல்துறை, வருவாய்த் துறை அதிகாரிகள் விரைந்து வந்து அனுமதியின்றி சிலை வைக்கப்பட்டுள்ளது; அகற்றுமாறு கோரினர்.

வீட்டின் வளாகத்துக்குள் சொந்த இடத்தில் வைத்துள்ள சிலையை ஏன் அகற்ற வேண்டும்? எதற்காக அனுமதி? என்று கேட்டு நீதிமன்றத் தீர்ப்புகளையும் கழகத் தோழர் எடுத்துக் காட்டினார்.

அதிகாரிகள் அது பற்றி கேட்காமலேயே சிலையை அகற்றி மூட்டையில் கட்டி வருவாய்த் துறை அலுவலகத்துக்கு எடுத்துச் சென்றனர். பெரியார் சிலை அகற்றப் பட்டதற்கு கடும் கண்டனங்கள் எழுந்தன. பிரச்சினை உடனடியாக அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

கோட்டையூரில் கழகத் தோழர் இல்லம் அருகே தான் பா.ஜ.க.வின் எச். ராஜா பண்ணை இல்லம் இருக்கிறது. அவரது



பண்ணை இல்லம் அருகே பெரியார் சிலை அமைக்கப்பட்டதை சகிக்க முடியாத பா.ஜ.க.வினர் காவல் துறைக்குப் புகார் தெரிவித்ததால் இந்த நடவடிக்கை எடுத்ததாகக் கூறப்படுகிறது.

**உதயநிதி ஸ்டாலின் தொடர்பு :** செய்தி அறிந்தவுடன் இளைஞர் நலத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் தொடர்பு கொண்டு பேசினார். அரசின் கவனத்துக்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டு சென்றிருப் பதாகவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதி கூறினார்.

இல்லத் திறப்பு விழா நிகழ இருக்கும் நேரத்தில் திடீரென்று சிலையை அகற்ற வேண்டாம்; வேண்டுமானால் சிலையை மூடி வைத்து விடுகிறேன் என்று கழகத் தோழர் அதிகாரிகளிடம் எடுத்துக் கூறியும் அதிகாரிகள் கேட்கத் தயாராக இல்லை.

**நடவடிக்கை:** பெரியார் சிலையை அகற்றிய காரைக்குடி வருவாய் வட்டாட்சியர் இரா. கண்ணன், உடனடியாக பணியிட மாற்றம் செய்யப்பட்டு, சிவகங்கை வனத் திட்ட அலுவலர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். இதற்கான ஆணையை மாவட்ட ஆட்சித் தலைவர் பிறப்பித்தார். தேவகோட்டை காவல்துறை துணை கண்காணிப்பாளர் கணேஷ் குமார் காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளார். இதற்கான ஆணையை தமிழ்நாடு காவல்துறை இயக்குநர் வெளியிட்டுள்ளார்.

**கோரிக்கை மனு :** சொந்த இல்ல வளாகத்தில் பெரியார் சிலையை அனுமதிக்குமாறு காரைக்குடி அருகே கோட்டயம் உதயம் நகரைச் சார்ந்த கழகத் தோழர் இளங்கோவன் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு அளித்துள்ளார்.

## காந்தி கொலை: முன் கூட்டியே எச்சரித்தார் பெரியார்

காந்தியை இந்துத்துவ தீவிரவாதிகள் படுகொலை செய்த நாள் (30.01.1948).

காந்தியடிகளை (ஆர்.எஸ்.எஸ். தீவிரவாதி கோட்சே) படுகொலை செய்யப்படக்கூடிய ஆபத்து இருப்பது குறித்து காந்தியிடமே முன்பே எச்சரித்தார் பெரியார்.

பெரியார் எச்சரித்தவாறே காந்தியை ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் கொலை செய்தார்கள்.

பெரியார் காந்தியை நேரில் பார்த்து கூறினார் :

“நான் சொல்லுகிறேன், தாங்கள் மன்னிக்க வேண்டும். இந்து மதத்தை வைத்துக் கொண்டு இன்று தங்களாலேயே நிரந்தரமாக ஒன்றும் செய்துவிட முடியாது. பிராமணர்கள் அவ்வளவு தூரம் விட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள். தங்கள் கருத்து அவர்களுக்கு விரோதமாகச் சற்றுப் பலிதமாகிறது என்று கண்டால் உடனே எதிர்க்க ஆரம்பித்து விடுவார்கள். இதுவரை ஒரு பெரியாராலும் இந்தத் துறையில் எந்தவிதமான மாறுதலும் ஏற்பட்டதில்லை என்பதோடு, அப்படிப்பட்ட ஒருவரையும் பிராமணர்கள் விட்டு வைத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.”

# காயாம்பட்டியில் ‘தீண்டாமை’ வன்முறை: பொய் வழக்கைக் கண்டித்து கழகம் ஆதரவு அமைப்புகள் ஆர்ப்பாட்டம்

மதுரை மாவட்டம் ஒத்தக்கடை அருகேயுள்ள காயாம்பட்டியில் ஜனவரி 15 பொங்கல் தினத்தன்று பட்டியல் சமூகத்தைச் சார்ந்த கண்ணன் எனும் இளைஞர் தன் மனைவி மற்றும் குழந்தையுடன் இரு சக்கர வாகனத்தில் சென்ற போது - காயாம்பட்டியை சார்ந்த ஆதிக்க ஜாதி வெறியர்கள் 7 பேர் சேர்ந்து தடுத்து நிறுத்தி “நீயெல்லாம் வண்டில வேகமா போறியா” என சொல்லி தாக்குதல் நடத்தியுள்ளனர். மேலும் அவரை நிர்வாணப்படுத்தி அவரது மனைவி மீதும் பாலியல் சீண்டல் செய்திருக்கின்றனர்.

இத் தகவலை அறிந்து திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மாவட்ட செயலாளர் மா.பா. மணி அமுதன் மக்களை சந்தித்து உண்மை தகவலை அறிந்து பாதிக்கப்பட்ட சமூக மக்கள் 26 பேர் மீது போடப்பட்ட வழக்கை திரும்ப பெறக் கோரி மாவட்ட காவல் கண்காணிப்பாளரை சந்தித்து புகார் மனு அளிக்கப்பட்டது.

அதனைத் தொடந்து 27-1-23 அன்று தலித் மக்கள் மீது போடப்பட்ட பொய் வழக்கை திரும்ப பெறக் கோரியும் - பட்டியல் சமூக மக்களை அச்சுறுத்தும் ஜாதி வெறியர்களையும் கைது செய்யக் கோரியும் மதுரை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் - மக்கள் கலை இலக்கியக் கழகம் ஒருங்கிணைப்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு மா.பா. மணிஅமுதன் தலைமை தாங்கினார். தமிழ்தேச மக்கள் முன்னணித் தலைவர் மீ.த. பாண்டியன், அதிமுக பொதுச் செயலாளர் பசும் பொன் பாண்டியன், தமிழ் புலிகள் கட்சி பொதுச் செயலாளர் பேரறிவாளன், தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாவட்ட துணைத் தலைவர் பாலகிருஷ்ணன், மகஇக மண்டல பொறுப்பாளர் சிவகாமு உள்ளிட்டோர் கண்டன உரை யாற்றினார்கள்.

தலையங்கம்

## அதானி குழுமம் மோசடி: மோடி ஏன் மவுனம் சாதிக்கிறார்?

மோடி தனது செல்லப் பிள்ளையாக வளர்த்துவிட்ட அதானி, இப்போது தனது சாம்ராஜ்யம் ஆட்டம் காணும் வகையில் பங்கு வணிக மோசடியில் ஈடுபட்டிருப்பது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. (மோடி - அதானியை வளர்த்த கதையை வேறு இடத்தில் வெளியிட்டிருக்கிறோம்)

2017ஆம் ஆண்டு கார்ப்பரேட் நிறுவனங்களில் நிகழும் மோசடிகளை ஆய்வு செய்ய உருவான அமெரிக்க நிறுவனமே ஹிண்டன்பர்க். கடந்த இரண்டு ஆண்டுகளாக அதானி குழும நடவடிக்கைகளை ஆய்வு செய்தது; குழுமத்தின் முன்னாள் அதிகாரிகளை நேர்காணல் செய்தது. அதனடிப்படையில் கடந்த வாரம் வெளியிட்ட அறிக்கை பெரும் அதிர்வு அலைகளை உருவாக்கியது. உலக பில்லியனர் இடத்தில் 3ஆவது இடத்தில் இருந்த அதானி (சொத்து மதிப்பு 11 இலட்சம் கோடி), இப்போது 7ஆம் இடத்திற்குத் தள்ளப் பட்டுள்ளார்.

அதானி குழுமத்தில் அதிவேக வளர்ச்சியில் அதன் நிறுவனப் பங்குகளைப் பெரும் தொகைக் கொடுத்து வாங்கினர். அரசு பொதுத் துறை நிறுவனங்களும் முதலீடு செய்தன. ஆயுள் காப்பீட்டுக் கழகமான எல்.அய்.சி., ரூ.77,000 கோடியை அதானி குழுமத்தில் முதலீடு செய்துள்ளதோடு, பொதுத் துறை வங்கிகள் கடன்களை வாரி வழங்கியுள்ளன.

அதானி செய்த மோசடி என்ன? நிதிநிலை சிறப்பாக இருப்பதாக சித்தரித்து பங்குச் சந்தையை ஏமாற்றியுள்ளது.

- அதன் 7 நிறுவனங்களில் பங்குகள் விலை மூன்று ஆண்டுகளில் 8.20 இலட்சம் கோடி அதிகரித்தது. இதைக் காட்டி வங்கிகளிடம் கடன் வாங்கியது (2 இலட்சம் கோடி கடன் பெற்றுள்ளது). அதன் நிதிநிலை 85 சதவீதத்துக்கும் அதிகமாக ஊதிப் பெருக்கிக் காட்டிப்பட்டிருக்கிறது.
- மொரிஷியஸ், அய்க்கிய அரபு அமீரகம் கரிபியன் தீவுகள் ஆகிய நாடுகளில் போலி நிறுவனங்களைத் தொடங்கியது. காரணம் இந்த நாடுகளில் வரிவிதிப்பு கிடையாது. இங்கே தொடங்கப்பட்ட நிறுவனங் களுக்கு, பணியாளர்களோ, நடவடிக்கை களோ, முகவரியோ, தொலைத் தொடர்பு எண்களோ இல்லை. ஆனாலும் பல பில்லியன் டாலர்கள் - செயல்படாத இந் நிறுவனங்களின் சார்பில் கணக்கில் எழுதப்பட்டுள்ளன.
- பட்டியலிடப்பட்ட இந்திய நிறுவனங் களில் 25 சதவீத பங்குகள் - குழும நிறுவனர்களை சாராதவர்களாக இருக்க வேண்டும் என்பது விதி. ஆனால் நான்கு நிறுவனங்களில் இந்த விதி பின்பற்றப் படவில்லை.

இப்படி எண்ணற்ற முறைகேடுகளை அம்பலப்படுத்துகிறது ஹிண்டன்பர்க். அதானி குழுமம் மறுக்கிறது. மறுத்து சவால் விடுகிறது அமெரிக்க நிறுவனம். “எங்கள் அறிக்கையில் நாங்கள் கேட்ட 88 கேள்விகளுக்கு பதில் இல்லை; வேண்டுமானால் எங்கள் மீது அமெரிக்காவிலேயே வழக்கு தொடரட்டும்; அமெரிக்க நீதிமன்றம் வழியாகவே மோசடி களை அம்பலப்படுத்துகிறோம்” என்கிறது அமெரிக்க நிறுவனம்.

முதலீடு செய்த பொதுத் துறை நிறுவனங்கள் பல்லாயிரம் கோடி இழப்பை சந்தித்துள்ளன. அத்தனையும் மக்கள் பணம். தான் வளர்த்து விட்ட செல்லப் பிள்ளையால் நாட்டின் பொருளாதாரமே பாதிப்புக்குள்ளாகி யிருப்பதைப் பார்த்து மோடி மவுனம் சாதிக்கிறார்.

இது குஜராத்திகள் பாசமா? அல்லது இந்தியப் பொருளாதார மய்யத்தை தனி மனிதனிடம் குவிந்து விட்டால் நாட்டை இந்துராஷ்டிர மாக்கிவிட முடியும் என்ற சூழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியா? நாட்டு மக்கள் கேட்கிறார்கள்.

# பழனி கோயில் - பார்ப்பன அர்ச்சகர்கள் நுழைந்த வரலாறு

பழனி மலைக் கோயிலில் 17 ஆண்டு களுக்குப் பிறகு தமிழில் குடமுழுக்கு நடந்து முடிந்திருக்கிறது. சொல்லப் போனால் பழனி மலை கோயில் என்பது பார்ப்பன ரல்லாத பண்டாரங்களின் கட்டுப்பாட்டில் சித்தர்களின் கட்டுப்பாட்டில் இருந்த ஒரு கோயில் தான்.

மதுரையை திருமலை நாயக்கன் என்ற ஒரு மன்னன் ஆட்சி செய்த போது அவனது படைத் தளபதியாக இருந்த தளவாய் ராமப்பய்யர் என்ற ஒரு பார்ப்பனர் பழனி மலை கோயிலுக்கு வழிபடச் சென்றார். அங்கே பார்ப்பனரல்லாத பண்டாரங்கள் வழிபாடு நடத்துவதைப் பார்த்து அவர் மனம் கொதித்துப் போனார். அவர்களிடம் இருந்து திருநீறை வாங்கிக் கொள்வதற்கு அவர் மறுத்தார், உடனடியாக மதுரைக்குத் திரும்பி பண்டாரங்கள் அத்தனை பேரையும் பதவியில் இருந்து நீக்கி இனி பார்ப்பனர்கள் மட்டுமே அர்ச்சகர் ஆக முடியும் என்று உத்தரவிட்டார்.

இப்படித்தான் வழக்கமாக ஆகம விதிப்படி பண்டாரங்கள் வழிபாடு நடத்தி வந்த கோயிலில், ஆகமங்களை மீறி பார்ப்பனர்கள் திணிக்கப்பட்டார்கள்.

அனைத்து சாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்று சொல்லுகிற போது ஆகம விதிகள் மீறப்படக்கூடாது என்று கூப்பாடு போடுகிற பார்ப்பனர்கள், பழனி சித்தர்கள் கோயிலில் பண்டாரங்கள் வழி பாட்டை நிறுத்திவிட்டு பார்ப்பனர்களை உள்ளே நுழைத்தது மட்டும் ஆகம விதி மீறல் இல்லையா என்ற கேள்விக்கு பதில் சொல்வதற்கு அவர்கள் மறுக்கிறார்கள். நாம் சொல்வது வாய்மொழிக் கதை அல்ல. இப்போதும் பழனி முருகன் கோயிலுக்குள் 1646ஆம் ஆண்டு இந்த தாமிரப் பட்டயம் செதுக்கப்பட்டு உள்ளது.

ஒரு கட்டத்தில் மூலிகைகளால் செய்யப்பட்ட பழனி முருகன் சிலையைத் திருடி திருடி பல வைத்தியர்கள் மருந்துக்கு பயன்படுத்தத் தொடங்கினார்கள். சிலை சிதைந்து போன நிலையில் இருந்தது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி காஞ்சி ஜெயேந்திரன் என்ற சங்கராச்சாரி அங்கு ஐம்பொன்னாலான சிலையை நிறுவி மூலிகைகளால் செய்யப்பட்ட முருகன் சிலையை அகற்றி சித்தர் மரபை சிதைக்க ஏற்பாடுகளை தன்னிச்சையாக அவர் செய்தார்.

ஜெயலலிதா ஆட்சி அதற்கான முழு உரிமையையும் அவருக்கு வழங்கியது, அந்தக் கோயிலுக்குள் இப்போதும் சித்தருக்கு வீடு இருக்கிறது. புலிப்பாணி அடிகள் என்ற ஒரு சித்தர் அங்கே இருந்தார். மூலிகைகளால் ஆன முருகன் சிலையை அகற்றிவிட்டு ஐம்பொன்னாலான முருகன் சிலையை வைப்பது என்பது ஆகமத்திற்கு பழனி கோயில் வழிபாட்டு முறைக்கு எதிரானது என்று எதிர்ப்பு தெரிவித்தார். ஒரு கட்டத்தில் ஜெயந்திரனிடம் அவர் வாதிக்கவும் சென்றார். காஞ்சிபுரம் சென்று நேரில் எதிர்ப்பு தெரிவிக்க வந்தபோது அவரை சமமாக அமர வைக்காமல் நிற்க வைத்துப் பேசிக் கொண்டிருந்தார் ஜெயேந்திரன். உடனே தன்னுடைய காரில் தான் கொண்டு வந்திருந்த இருக்கையை கொண்டுவர சொல்லி ஜெயேந்திரனுக்கு இணையாக இருக்கையில் சமமாக அமர்ந்து சமரசமாக பேசினார், உரையாடினார் என்பது வரலாறு.

அந்த காலகட்டத்தில் அப்போதைய தந்தை பெரியார் திராவிடர் கழகம் ஜெயேந்திரனின் அத்துமீறிய ஆக்கிர மிப்பையும், பண்டாரங்களை ஒழிக்கப்பட்டு பார்ப்பனர்களை புகுத்தப்பட்டதையும் கண்டித்து தமிழில் வழிபாட்டு உரிமை குடமுழுக்கு வேண்டும் என்பதையும் வலியுறுத்தி மக்கள் இயக்கங்களை நடத்தியது அனைத்துக் கட்சிகளையும் ஒன்று திரட்டி பழனியில் மாபெரும் பொதுக் கூட்டங்கள் நடத்தியது என்பது வரலாறு.

பழனியில் இப்போது தமிழில் குட முழுக்கு நடத்துகிற இந்த வேளையில் இந்த வரலாறுகளை நாம் சுட்டிக்காட்டுகிறோம்.

## நன்கொடை

மலேசியா சிலாங்கூர் பகுதியில் வசிக்கும் பெரியாரியலாளர் பரமசிவம், 2023ஆம் ஆண்டுக்கான ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழுக்கு வளர்ச்சி நிதியாக ரூ.5,000/- வழங்கினார்.

# அதானியை மோடி வளர்த்தது எப்படி?

குஜராத்தின் அஹமதாபாத்தை தலைமையிடமாகக் கொண்டு 1988ம் ஆண்டில் கௌதம் அதானி என்பவரால் அதானி என்டர்பிரைசஸ் லிமிடெட் நிறுவனம் ஒரு பன்னாட்டு நிறுவனமாக தொடங்கப்பட்டது. இந்நிறுவனத்தின் மிகப் பெரிய வளர்ச்சிக்கு பிரதமர் மோடியே அடித்தளமிட்டவர்.

கடந்த 2014ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிரதமர் மோடி தனது ஆத்ம நண்பரான அதானியை ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்தின் போதும் உடன் அழைத்துச் சென்றார்.

2019இல் ஆஸ்திரேலியா சென்ற போது அதானியை அழைத்துச் சென்று, அங்குள்ள குயின்ஸ்லாந்தில் சார்பில் 12.3 பில்லியன் அமெரிக்க டாலர்களில் மேற்கொள்ளப்பட இருந்த பெரிய திட்டத்திற்கு **அதிகாரப்பூர்வ ஆரம்பத்தைப் பெற்று தந்தார்**. இதற்கு இந்தியாவில் உள்ள வங்கிகள் பிணை வழங்கியது சர்ச்சைக்கு உள்ளானது.

தொடர்ந்து இந்தோனேசியாவில் இருந்து நிலக்கரி இறக்குமதி செய்வதை அதானி குழுமத்தின் முழு கட்டுப்பாட்டில் கொண்டு வந்ததிலும் ஒன்றிய அரசின் ஒப்புதல் பரிபூரணமாக இருந்தது. ஒரு காலத்தில் அதானி குழுமத்தின் ஆதிக்கத்தின் கீழ் விமான நிலையங்கள், துறைமுகங்கள் உள்ளிட்டவையும் வந்து சேர்ந்தன.

உலகத்தையே அச்சுறுத்திய கொரோனா தொற்றுக் காலத்தில் எல்லா நிறுவனங்களும் கடும் சரிவினைக் கண்டு குட்டிக்கரணம் அடித்தன. ஆனால் அதானி குழுமம் மட்டும் ரூ.11 இலட்சம் கோடி சொத்து மதிப்புடன் உலகின் மூன்றாவது பெரிய பணக்காரர் பட்டியலுக்கு முன்னேறியது.

அதானி குழுமத்தின் வளர்ச்சி எப்படி பிரம்மிக்கத்தக்கதாக இருந்ததோ, இப்போது வீழ்ச்சியும் அந்த அளவுக்கு அதல பாதாளத்தை நோக்கியே உள்ளது.

# ஆறாம் திருமுறை இருட்டடிக்கப்படுவது ஏன்?

***சைவத்தில் பற்று வைத்து பிறகு சிந்தனை வளர்ச்சிப் போக்கில் சைவத்தின் மனித சமத்துவ எதிர்ப்புக் கருத்துக்களை எதிர்த்து போர்க்கொடி உயர்த்தியதுதான் வள்ளலாரின் தனித்துவம். அவர் சுய மத மறுப்பாளர். சைவத்துடனேயே அவர் வாழ்நாள் முழுதும் போராட வேண்டியிருந்தது.***

**விடுதலை இராசேந்திரன்**


“நாம் இலட்சியம் வைத்துக் கொண்டிருந்த வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனினும் இலட்சியம் வைக்க வேண்டாம்”, இதுதான் தனது கடைசி பத்தாண்டுகளில் வள்ளலார் மக்களிடம் முன்வைத்த வேண்டுகோள்; அது மட்டுமல்ல சைவம், வைணவம் முதலிய சமயங்களிலும் இலட்சியம் வைக்க வேண்டாம்” என்று அனைத்து மதங்களையும் அதன் தத்துவங் களையும் எதிர்த்த புரட்சிக்காரராக அவர் வாழ்ந்தார். அவர் வாழ்ந்த காலம் 51 ஆண்டுகள். ஆனால் தனது ஆறாம் திருமுறையில் அவர் எழுதிய புரட்சிக் கருத்துக்கள் இன்று வரை இருட்டடிக்கப்படுகின்றன.

“ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்”; “கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் குளிர் தருவே”; “அம்பலத்தரசே அருமருந்தே ஆனந்தத்தேனே, அருள் விருந்தே”; “அருட் ஜோதி தெய்வம் எனை ஆட்கொண்ட தெய்வம்”; “அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்த தெய்வம்” போன்ற பாடல்களோடு “அருட் பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை” என்று மங்களம் பாடி அவரது சீடர்கள் பலரும் முடித்து விடுகிறார்கள். வரலாற்றில் பார்ப்பனி யம் தனது எதிர்ப்பு சிந்தனைகளை ஜீரணித்து ஏப்பம் விட்ட சதிகளுக்கு இது மற்றொரு சான்று.

1872இல் ஞானசபையை உருவாக்கிய அவர் அதற்கான விதிகளில் ஜாதி மறுப்பு, சமய மறுப்புகளை உள்ளடக்கமாக்கினார். வள்ளலார் தொடக்க காலங்களில், சைவப் பற்றோடு தாம் எழுதிய பாடல்களை அச்சு ஏற்றவே விரும்ப வில்லை. ஆனால், மக்களிடத்தில் அதற்கு மிகவும் செல்வாக்கு இருந்தது. இறுக்கம் இரத்தின முதலியார் அவரது பாடல்களைத் தொகுக்க விரும்பி அடிகளாரின் சம்மதம் பெற பெரும் போராட்டமே நடத்த வேண்டி இருந்தது. ஒரு கட்டத்தில் அடிகளார் தனது பாடல்களை அனுப்பி ஒப்புதல் தரும் வரை, தாம் ஒரு வேலை உணவை மட்டுமே உட் கொள்ள முடிவு எடுத்திருப்பதாக அடிகளா ருக்கு கடிதம் எழுதினார். இதற்குப் பதறிப் போய் பதில் எழுதிய வள்ளலார், “தங்களது பட்டினி அறிவிப்பு தன்னை பாதித்தது என்றும், தாம் உண்ணும் உணவு உடம்பில் ஒட்ட மறுக்கிறது என்றும் இரண்டு மாதங்களில் பாடல்களை அனுப்பி வைப்பதாக” பதில் எழுதுகிறார். இவ்வளவு ஆர்வமும், துடிப்பும் உடைய இரத்தின முதலியார், ஆறாம் திருமுறையை பதிப்பதில் ஆர்வம் காட்டவில்லை. பழமை வாதிகளுக்கு ஆறாம் திருமுறை அதிர்ச்சி வைத்தியமாகிவிட்டது.

கடவுள் வழிபாடு என்பது, சடங்குகள், யாகங்கள், வேண்டுதல்களில் இல்லை. மனிதர் களுக்கு மனிதர்கள் உதவும் ‘ஜீவகாருண்யம்’ தான் கடவுள் வழிபாடு. அதுதான், சன்மார்க்கம்” என்றார். தமிழ் சிந்தனை மரபில் இப்படி மனிதத்தை கடவுளாக்கிய வேறு சிந்தனையாளர் ஒருவர் கூட இல்லை. அதே போல் ‘பசித்த வயிற்றுக்கு உணவு இடு’ என்று வேத மத மரபில் எந்த ரிஷியும், அவதாரமும், எந்த வேதமும், புராணமும், மகான்களும் கூறிய சான்றுகளே இல்லை.

இன்னும் ஒரு படி மேலே போய் தனது சன்மார்க்க நெறிக்கு அவர் தரும் விளக்கம் கடவுள், மதம் மறுப்பாகவே இருக்கிறது. உபதேசக் குறிப்புகளில் அவர் இவ்வாறு எழுதுகிறார்.



“சமயத் தெய்வங்களில் வழிபாடு செய்து அந்த சமயத் தெய்வங்களை பெற்றுக் கொண்ட அற்ப சித்தியில் அவர்கள் மயங்கி மகிழ்ந்து அகங்கரித்து மேலேற வேண்டிய படிகள் எல்லாம் ஏறி பூரண சித்தியை அடையாமல், தடைப்பட்டு நிற்றல் நில்லாமல் சர்வ சித்தியை அடைய கடவுள் ஒருவர் உண்டென்றும் அவரை உண்மையின் பால் வழிபாடு செய்து பூரண சித்தியைப் பெற வேண்டும் என்பதே சன்மார்க்க சங்கத்தின் கோட்பாடு” என்கிறார்.

சமய மறுப்பு, தெய்வ உருவம், சடங்கு மறுப்பு சன்மார்க்கத்தின் கோட்பாடு. என்று 1872 லேயே துணிவோடு அறிவித்த வள்ளலாரை வைதீகம் எப்படி ஏற்கும் ?

- *கடைசி 10 ஆண்டுகளில் மதங்கள் அனைத்தை யும் வேண்டாம் என்றார்.*
- *‘திருவருட்பா’ என்று தனது தொகுப்புக்கு பெயர் சூட்டியது வள்ளலார் இல்லை.*
- *வள்ளலாரின் அய்ந்து திருமுறைகளையும் வெளியிட ஆர்வம் காட்டிய பலரும் 6ஆம் திருமுறையை வெளியிட விருப்பம் காட்டவில்லை; சைவப் பற்றே காரணம்.*
- *வள்ளலாரே தனது 6ஆம் திருமுறையை வெளியிட ஆர்வம் காட்டவில்லை என்ற ம.பொ.சி.யின் கருத்து உண்மைக்கு மாறானது.*
- *தில்லை தீட்சதர்கள் அர்ச்சகர்களாக முடியாது; அவர்கள் சிவதீட்சைப் பெற்றவர்கள் அல்ல என்று கடுமையாக எதிர்த்தவர் ஆறுமுக நாவலர்.*

வள்ளலார் தனது பாடல் தொகுப்புக்கு பெயர் எதுவும் சூட்டவில்லை; அவரது முதன்மை சீடரான வேலாயுத முதலியார் தான் ‘திருவருட்பா’ எனப் பெயர் சூட்டினார். தெய்வத் தன்மை கொண்ட பாடல்கள் என்ற பொருளிலே அப்பெயர் சூட்டப் பெற்றது. ஆறு திருமுறைகளாகத் தொகுத்ததும் அவரே; ‘திருமுறை’ என்றால் ‘பகுதி’ என்று பொருள். இதில் தனது புரட்சிக்கரக் கருத்துக்களை பதிவு செய்த இறுதிக்கால பாடல்கள் ஆறாம் திருமுறையாக தொகுக்கப் பெற்றாலும் அதை உடனடியாக வெளியிட வேண்டாம் என்பதே அடிகளாரின் கருத்து . முதலில் வெளிவந்தது அய்ந்து திருமுறைகள் தான். 13 ஆண்டுகள் கழித்து 1880 இல் வள்ளலார் மறைவுக்குப் பிறகு தான் 6ஆம் திருமுறை வெளிவந்தது.

அய்ந்து திருமுறைகளை வெளியிட்ட வேலயாயுதம் முதலியார், ஆறாம் திருமுறையை வெளியிட ஆர்வம் காட்டாமைக்குக் காரணம் அவரது பழமையில் ஊறிய சைவப்பற்று தான். அது மட்டுமல்ல, முதல் 5 தொகுதிகள் வெளி வருவதில் பேரார்வம் காட்டிய இறுக்கம் இரத்தினம், புதுவை வேலு முதலியார், சிவாநந்தபுரம் செல்வராய முதலியார், பொருள் உதவி செய்த சோமசுந்தரம் செட்டியார் ஆகியோரும் 6ஆம் திருமுறை வெளி வருவதில் ஆர்வமின்றி ஒதுங்கி விட்டனர். ஏதோ, வள்ளலார் கேட்டுக் கொண்டதற்காக அவருக்கு அஞ்சி வேலாயுத முதலியார் - அவர் உயிருடன் இருக்கும் வரை வெளியிடவில்லை என்று ம.பொ.சிவஞானம் (மாபொசி) எழுதுவது உண்மைக்கு மாறானது என்கிறார், ஆய்வாளர் சரவணன். வள்ளலாருக்கே 6ஆம் திருமுறையில் உடன்பாடு இல்லை என்ற ஒரு பொய்த் தோற்றத்தை உருவாக்குவதே ம.பொ.சி.யின் உள் நோக்கம். உண்மை என்னவென்றால் வேலாயுத முதலியார் வாழ்ந்த காலத்திலேயே 1885இல் ஆறாம் திருமுறை வெளியிடப்பட்டு விட்டது. 1889இல் தான் முதலியார் மரணமடைகிறார். வேலாயுத முதலியாருக்கு அச்சிட மனமில்லாத காரணத்தால் வேலூர் பத்மநாப முதலியார் வெளியிட்டார் என்கிறார் ஆய்வாளர் பா.சரவணன்.

இந்தப் பின்னணியில் அடிகளாரின் திருவருட்பாவிற்கு பழமையில் ஊறிப்போன தீவிர சைவர்களிடமிருந்து கடும் எதிர்ப்பு வந்தது, அதில் முதல் வரிசையில் நின்றவர் யாழ்ப்பாணத்தில் பிறந்த ஆறுமுக நாவலர், தமிழகத்தோடு குறிப்பாக சிதம்பரம் கோயிலோடு நெருக்கமாக இருந்தார்; ஐந்து முறை தமிழகம் வந்த அவர் சிதம்பரத்திலேயே தங்கி ‘சைவ பிரகாச வித்யா சாலை’ எனும் பாடசாலையை நிறுவினார்.

வேதத்தை விட ஆகமம் உயர்ந்தது, ஆகமம் சைவத்திற்கே உரியது என்ற கருத்துடைய அவர் தில்லை தீட்சிதர்களைக் கடுமையாக சாடியவர். அவர்கள் சிவ தீட்சை பெறாதவர்கள் அவர்கள் கையில் இருந்து விபூதி வாங்கக் கூடாது, அவர்களுக்கு பூஜைகள் நடத்தும் உரிமைக் கிடையாது என்று கடுமையாக எதிர்த்தார், இதனால் தீட்சிதப் பார்ப்பனர்கள் நாவலர் மீது பகைக் கொண்டனர்.

நாவலருக்கு எதிராக போலியான அர்ச்சகர்களை உருவாக்கி அவர் மீது சேறு வாரி தூற்றி இழிப் பிரச்சாரங்களை செய்தனர். நாவலர் தீட்சிதர்களுக்கு பதிலடி தந்து வந்தார்.

அதே நாவலர் வள்ளலாரின் பாடல்கள் ‘திருவருட்பா’ அல்ல என்று மறுத்தார், தேவாரம் திருவாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டு பெரியபுராணம் எனும் ஐந்து புராணங்கள் தான் திருவருட்பாவே தவிர மற்றவை அல்ல என்றார், வள்ளலார் பாடல்களை நேரடியாக கண்டித்து மருட்பா என்றார், பார்ப்பனர்களை கடுமையாக சாடும் திரு மந்திரத்தையே அருட்பா பட்டியலில் சேர்க்காதவர், அவர் ஆறுமுக நாவலர் கருத்துக்கு எதிராக 1868இல் ‘திருவருட்பா தூசன பரிகாரம்’ எனும் நூலை திருமயிலை சண்முகம் பிள்ளை என்பவர் எழுதி வெளி யிட்டார்.

அருட்பா மறுட்பா விவாதங்கள் அனல் பறக்கத் தொடங்கின; அடிகளாருக்கு ஆதரவாக அட்டாவதனம் வீராசாமி செட்டியார், இறுக்கம் இரத்தினம் முதலியார், பூவை கல்யாணசுந்தர முதலியார், செய்கு தம்பி பாவலர் உள்ளிட்ட சுமார் 23 பேர் களமிறங்கினர்.

மருட்பாவுக்காக களமிறங்கி யவர்களில் திருவாடுதுறை வேதாரண்யம், திருவண்ணா மலை மற்றும் தருமபுரம் ஆதீனங்கள் உவே சாமிநாதையர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, நா. கதிரைவேற் பிள்ளை, திரு.வி. கல்யாணசுந்தர முதலியார் உள்ளிட்ட சுமார் 15 பேர்.

**(சமூக அரசியல் கலை இலக்கியக் காலாண்டு இதழான ‘புது மலர்’ வெளியிட்ட வள்ளலார் சிறப்பிதழுக்கு எழுதிய கட்டுரை. கட்டுரையின்; அடுத்த பகுதி அடுத்த இதழில்)**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ஈஷா மய்ய மர்மங்கள் : கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த கோவை மாவட்டக் கழகம் முடிவு



கோவை மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம் சனவரி 26, காலை 10 மணிக்கு கோவை ஆதித்தமிழர் பேரவை அலுவலகத்தில் மாவட்டத் தலைவர் பா. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது, இக்கூட்டத்தில் அண்மையில் மறைந்த தூத்துக்குடி மாவட்ட தலைவர் பால்ராசு, தபெதிக பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன் இணையர் வசந்தி, தியாகி இம்மானுவேல் சேகரன் பேரவைப் பொதுச்செயலாளர் சந்திரபோஸ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் திருமகன் ஈவெரா ஆகியோருக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

ஈசா யோகா மையத்தில் தொடரும் மர்மங்களைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்துவது, பெரியார் கொள்கைகளை விளக்கி புதிய இடங்களில் தெருமுனைக் கூட்டம் நடத்துவது, தலைமைக் கழக வெளியீடுகளை மக்களிடத்தில் பரவலாக கொண்டு சேர்ப்பது, பெரியாரியல், திராவிடர் இயக்க பயிலரங்கங்கள் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு நூலகங்களில் 'புரட்சிப் பெரியார் முழக்கம்' செல்கிறதா என்பதில் தோழர்கள் கவனம் செலுத்தி இதழ் செல்வதற்கு வழி செய்ய தோழர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

2023ஆம் ஆண்டிற்கான கழக வார ஏடான 'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஆண்டு சந்தா 406, அய்ந்தாண்டு சந்தா 3-க்கான சந்தா தொகை முதல் தவணையாக ரூ.25,200/- வழங்கப்பட்டிருந்த நிலையில், இரண்டாம் தவணையாக ரூ.74,800/- கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் வழங்கப்பட்டது.

கழகக் கொள்கைகளுக்கு முரணாக செயல்பட்டு வருகிற ஆனைமலை சிவா, தற்காலிகமாக கழகத்தில் இருந்து விலக்கி வைக்கப்படுகிறார், அவருடன் கழகம் தொடர்பான நிகழ்ச்சிகளில் கழகத் தோழர்கள் எவ்வித தொடர்பும் வைத்து கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறது.

# காந்தி முதல் கவுரி லங்கேஷ் வரை : திருச்சியில் கழகம் கருத்தரங்கம்




திராவிடர் விடுதலைக் கழகம் திருச்சி, பெரம்பலூர் மாவட்டக் கழகங்களின் சார்பில், காந்தியார் நினைவு நாள் கருத்தரங்கம், "காந்தி முதல் கவுரி லங்கேஷ் வரை" என்ற தலைப்பில், 28.01.2023 அன்று மாலை 5 மணியளவில், திருச்சி இரவி மினி அரங்கில் நடைபெற்றது.

கருத்தரங்கத்திற்கு, பெரம்பலூர் மாவட்டத் தலைவர் துரை தாமோதரன் தலைமை வகித்தார். நிகழ்விற்கு, திருச்சி மாவட்டச் செயலாளர் மனோகரன் வரவேற்பு கூறினார். திருச்சி மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி, திருவரங்கம் அசோக், விராலிமலை குமரேசன், திருச்சி ஆறுமுகம், போலீஸ் காலனி மணிகண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்வின் தொடக்கத்தில், மக்கள் கலை இலக்கிய கழகம் மய்யக் குழுவின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. மதவெறிக்கு எதிரான பாடல்களை கலைக்குழுவினர் பாடினர். தொடர்ந்து, விசிக துணைப் பொதுச் செயலாளர் வன்னி அரசு கருத்துரையாற்றினார்.

இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சங் பரிவாரங்களின் மதவெறிக் கலவரங்கள் மற்றும் கொலைகளைப் பற்றி விரிவாக விளக்கி உரையாற்றினார். திருச்சி மாவட்ட பொருளாளர் டார்வின் தாசன் நன்றி கூற கருத்தரங்கம் நிறைவுற்றது. திருச்சி மற்றும் பெரம்பலூர் மாவட்ட கழகத் தோழர்கள் அனைவரும் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

# திருப்பூர் மாஸ்கோ நகரில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் தமிழ்ப் புத்தாண்டு – பொங்கல் விழா

சிறுவர் சிறுமியர் விளையாட்டுப் போட்டிகள் - கலை நிகழ்ச்சி - தமிழிசைப் பாடல்கள் - பொதுக் கூட்டம் என ஒரு நாள் நிகழ்சியாக மிகச் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சிகள் அனைத்திலும் அப்பகுதி வாழ் பொதுமக்கள் மிகுந்த உற்சாகத்துடன் பங்கேற்றனர். திருப்பூர் மாஸ்கோ நகர் பெரியார் திடலில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 13ஆவது ஆண்டு பொங்கல் விழா மற்றும் தமிழ் புத்தாண்டு விழா ஆகியவை 22.01.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி முதல் இரவு வரை நடைபெற்றது. விழாவிற்கு மாநகரச் செயலாளர் மாதவன் தலைமை தாங்கினார்.

முதல் நிகழ்வாக காலை 10.00 மணிக்கு பொதுமக்களுக்கு பொங்கல் வழங்கும் நிகழ்வை தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி அவர்கள் தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து கழகப் பொருளாளர் துரைசாமி, மாநகரத் தலைவர் தனபால், மாநகர அமைப்பாளர் முத்து, தெற்கு பகுதி கழகச் செயலாளர் இராமசாமி, சரசு, பகுதி கழகத் தோழர் கோமதி, அய்யா இராமசாமி ஆகியோர் பொங்கல் வழங்கி சிறப்பித்தனர்.

அடுத்த நிகழ்வாக சிறுவர் சிறுமியருக்கான விளையாட்டுப் போட்டிகள் தொடங்கியது. விளையாட்டுப் போட்டிகளை திருப்பூர் மாநகர மேயர் கே.என். தினேசுகுமார் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். அவர் தம் உரையில், திராவிடர் விடுதலைக் கழகத்தின் பணிகளுக்கு பாராட்டு தெரிவித்தும், வரும் காலங்களில் திவிகவின் பணிகளுக்கு உறுதுணையாக இருப்போம் என உறுதியளித்தார். அவ்வமயம் மாவட்டத் தலைவர் முகில் இராசு, மாநகரச் செயலாளர் நீதிராசன் ஆகியோர் உடனிருந்தனர். விளையாட்டுப் போட்டிகள் மாலை 5.00 மணி வரை நடைபெற்றன.

மாலையில் முதல் நிகழ்வாக குழந்தைகளின் நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அடுத்த நிகழ்வாக மேட்டூர் டி.கே.ஆர். பகுத்தறிவு இசைக் குழுவின் தமிழிசை, கிராமியப் பாடல்கள் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்வில் பொள்ளாச்சி பாடகர் கண்ணையா, நஜ்முன்னிசா ஆகியோர் பகுத்தறிவுப் பாடல்களைப் பாடினர். மேடை நிகழ்வாக சரியாக 9.00 மணிக்கு துவங்கியது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழா குறித்து சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து கழகப் பொருளாளர் துரைசாமி, தலைவர் தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி, மாவட்டத் தலைவர் முகிர் இராசு, கோவை மாவட்டக் கழகத் தலைவர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன் ஆகியோர் உரையாற்றினர். நிறைவாக விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற சிறுவர் சிறுமியருக்கான பரிசளிப்பு விழா நடைபெற்றது. பரிசளிப்பு விழாவில் மதிமுகவின் மாவட்டச் செயலாளர், மாமன்ற உறுப்பினர் ஆர். நாகராஜ் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கி சிறப்பித்தார். முடிவில் பகுதி கழகத் தோழர் கோமதி நன்றி கூற நிகழ்ச்சி நிறைவுற்றது.

# மொழிப் போர் தியாகிகள், முத்துக்குமார் நினைவிடங்களில் கழகம் மரியாதை



1938 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பில் வீரமரணம் அடைந்த நடராசன், தாளமுத்து நினைவிடம் வட சென்னை மூல கொத்தளம் பகுதியில் உள்ளது. அதேபோல ஈழத் தமிழருக்காக தீக்குளித்த முத்துக்குமார் நினைவிடம் சென்னை கொளத்தூரில் உள்ளது. கழக சார்பில் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மயிலை சுகுமார், இராவணன், மனோகரன், பிரவீன், உதயகுமார், ரவி பாரதி, சிவா, கனி, நரேஷ் உள்ளிட்ட தோழர்கள் முறையே ஜன. 25 மற்றும் 30ஆம் தேதிகளில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

## சென்னையில் காந்தி படுகொலை நாள் பொதுக்கூட்டம்

சென்னை மயிலாப்பூர் பகுதி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் காந்தி படுகொலை நாள் பொதுக் கூட்டம் 6.2.2023 திங்கள் மாலை மந்தை வெளி இரயில் நிலையம் அருகே நடைபெற உள்ளது.

**உரை :** ஆளூர் ஷா நவாஸ், எம்.எல்.ஏ.
பால். பிரபாகரன் (பரப்புரைச் செயலாளர்)
வழக்கறிஞர் திருமூர்த்தி
கு. அன்பு தனசேகரன் (தலைமைக் குழு உறுப்பினர்)

கோவன் குழுவினர் பங்கேற்கும் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 3rd February 2023

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN